[2nd November 1962

வரும் விவசாயப் பண்ணைகள் எத்தனை, தனியார் வைத்து அவர்கள் மேற்பார்வையில் நடந்துவரும் விவசாயப் பண்ணைகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாகக் கேள்வி தேவை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், கூட்டுறவு சாகுபடி செய்வதற்காக விவசாயிகள் அதிக அக்கறை காட்டுவதால், தர்ம ஸ்தாபனங்களுடைய நிலங்களையெல்லாம் உடனடியாக எடுத்துக்கொண்டு, கூட்டுறவு முறையில் அவர்கள் விவசாயம் செய்வதற்குக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, மாயூரம் பக்கத்தில் வக்காரமாரியில் அமைக்கப்பட்டு இருக்கும் கூட்டுறவுப் பண்ணையில் தகராறு ஏற்பட்டு இருந்ததே, இப்போது அது எந்த நிலவரத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் வைத்து நடத்துவது ஏழை மக்களுக்கு மிகவும் லாபகரமாக இருக்கிறது. இதிலே அவர்களுக்கு மாடுகள் வாங்குவதற்காக கொடுக்கும் பணத்திலே எவ்வளவு தொகை இனமாகக் கொடுக்கப்படுகிறது ? எவ்வளவு கடனாக கொடுக்கப்படுகிறது ? அதேபோல், கிணற்றுக்கு மான்யம் கொடுப்பதிலேயும், எவ்வளவு தொகை இனம், எவ்வளவு தொகை கடனாக வழங்கப்படுகிறது என்பதை தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : மாடுகள் வாங்குவதற்கு கொடுக்கப்படுகிற பணம் அநேகமாக இனமாகத்தான் கொடுக்கப்படுகிறது. மற்றபடி, அடுத்த கேள்விக்கு தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், தமிழ் நாட்டிலே கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையிலே நடக்கிறது என்று பொதுமக்கள் சொன்னாலும்கூட, கூட்டுறவு பேரிலே நம்பிக்கையில்லாத கட்சிக்காரர்கள் அதைப்பற்றி குறை கூறிக்கொண்டு வருவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை.)

* 1078 *Q.*—Sri V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of co-operative agricultural farms in operation in the State?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Twenty-eight.